# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No. 2/2015

DW1– ஜீனா நாள் 17.03.2025

**7 முதல் 10 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா 1 முதல் 12 அயிட்ட சொத்துக்கள் என் அப்பாவுக்கு பூர்வீக சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்தை பொருத்து என் அப்பாவோ, என் சித்தப்பாவோ எனக்கு கிரையபத்திரமாகவோ, பாகப்பத்திரமாகவோ எழுதிக்கொடுக்கவில்லை. நானும் என் சகோதர சகோதரிகளும் சேர்ந்து பாகப்பிரிவினை பத்திரம் செய்துகொள்ளவில்லை. சகோதரர்கள் அவர்களுக்குள் பாகப்பிரிவினை பத்திரம் செய்து கொண்டார்கள். என் சகோதரர்கள் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்று ஞாபகமில்லை. தாவா 1வது அயிட்ட சொத்தில் உள்ள கடைகளை என் அப்பாவும் சகோதரர்களும் சேர்ந்து கூட்டுகுடும்ப வருமானத்தில் கட்டியது என்றால் சரியல்ல. என் அப்பா ஜவுளி வியாபாரம் மதுரையில் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என் அப்பா வருமானத்தில் இந்த சொத்துக்களை வாங்கியதாக சொல்வது சரியல்ல. தாவா 4வதுஅயிட்ட சொத்தில் 12 கடைகள் உள்ளன. என் அப்பா உயிருடன் இருக்கும்போது 7 கடைகள் கட்டப்பட்டது. என் அப்பா கூட்டுகுடும்ப வருமானத்திலிருந்து தான் 7 கடைகளையும் கட்டினார் என்றால் சரியல்ல. கடைகள் கட்டிய காலத்தில் என் மூத்த சகோதரர் சென்னையில் இருந்தார் என்றால் சரிதான்.மற்ற சகோதரர்கள் படித்து முடித்துவிட்டார்கள். கடைகள் கட்டிய காலத்தில் நான் பணியில் இருந்தேன். கடை கட்டுவதற்கு நான் என்னுடைய தனிப்பட்ட வருமானத்தை செலவிடவில்லை என்றால் சரியல்ல. ஐசிஐசிஐ வங்கியில் கடன் பெற்று கடைகளை கட்டியிருந்தால் அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் நினைவில்லை. என் அம்மா தானசெட்டில் மெண்ட் எழுதிகொடுக்கும் காலத்தில் நல்ல நடமாட்டத்துடன் தான் இருந்தார். அவர் இன்டர்மீடியேட்

படித்திருந்தார். அவர் நன்றாக கையெழுத்து போடுவார். 01.06.2010ல் என் தாயார் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் தான் என்னிடம் காட்டப்படுவது அது பி.வா.சா.ஆ.4 ஆகும். என் அம்மா நன்றாக கையெழுத்துபோடுவார் என்ற நிலையில் பி.வா.சா.ஆ.4ல் கைரேகை வைத்ததாக உள்ளது என்றும் எனவே இந்த ஆவணத்தை நான்மோசடியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நகராட்சியில் நான் வீட்டுவரி செலுத்திய ரசீதுகள் தான் என்னிடம் காட்டப்படுவது அது பி.வாசா.ஆ.5 ஆகும். என் பெயரில் உரிமையில்லாத சொத்துக்களுக்கு மோசடியாக நான் நகராட்சியை ஏமாற்றி வரி செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. கடைகளுக்கான மின்இணைப்பு கட்டண அட்டை என் பெயரில் ஏற்பட்டுள்ளது அது பி.வா.சா–ஆ.6 ஆகும் மின்சாரதுறையை ஏமாற்றி என் பெயரில் மின்இணைப்பு கட்டண அட்டை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நகராட்சிக்கு என் பெயரில் குடிநீர் இணைப்பு மாற்றியதற்கான ஆவணம் தான் என்னிடம் காட்டப்படுவது அது பி.வா.சா.ஆ.7 ஆகும். இந்த ஆவணமும் என் செல்வாக்கை பயன்படுத்தி என் அம்மா பெயரிலிருந்து மாற்றிக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணம் நானாக ஏற்படுத்தியது என்பதால் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி ஒரு கடையில் அலுவலகம் வைத்திருந்தார் என்றால் சரிதான். என் அனுமதியின் பேரில் தான் வைத்திருந்தார். தற்போது இல்லை. அசல்வழக்கு எண் 5/2014 நான் தான் தாக்கல் செய்தேன். அந்த வழக்கில் பிரதிவாதிகள் ஒருதலைப்படுத்தப்பட்டார்கள் என்றால் சரிதான். நான் ஒருதலைப்படுத்தப்பட்ச உத்தரவை வைத்து கொண்டுதான் பாலமுருகனை கடையைவிட்டு காலிசெய்தேன் என்றால் சரியல்ல. 26.02.2014 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு வந்தது. அந்த அறிவிப்பு தான் என்னிடம் காட்டப்படுவது அது பி.வா.சா.ஆ.8 ஆகும். அந்த அறிவிப்பில் எல்லா தாவா சொத்துக்களையும் காட்டியுள்ளார்கள். பாலமுருகன் 2005ல் பாக வழக்கு தொடர்ந்தார் என்றால் சரிதான். அவர் வழக்கு போட்ட பிறகு விபத்து ஏற்பட்டு

தலையில் காயம்பட்டு மேற்கொண்டு வழக்கு நடத்தாமல் விட்டுவிட்டார் என்றால் எனக்கு நினைவில்லை. அந்த பாக வழக்கில் என்னையும் பிரதிவாதியாக சேர்த்திருந்தார். 12 கடைகளின் வாடகையையும் நான் தான் வாங்கி வருகிறேன். தாவா சொத்தில் வீடு கட்டி உள்ளேன். தாவா சொத்து சம்பந்தமாக அம்மா எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை தான் தாக்கல் செய்துள்ளேன். என் சகோதரர் ராமகிருஷ்ணன், சித்தி சண்முகபிரியா செட்டில்மெண்ட் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். கூட்டுறவு சங்கத்தில் கடன் பெற்று வீடு கட்டினேன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்துக்கள் அனைத்தும் கூட்டுகுடும்ப சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களின் நீண்ட கால அனுபவம் எனக்கு இல்லை என்றால் சரியல்ல. ராமகிருஷ்ணன், வெங்கடேசனின் மகனுடன் இணக்கமாக இருந்துகொண்டு இந்த வழக்கை நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் என் அப்பா மற்றும் சகோதர, சகோதரிகளின் கூட்டுவருமானத்தில் வாங்கிய சொத்துக்கள் என்றும், எனவே தாவா சொத்துக்களில் எல்லோருக்கும் பங்கு உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனக்கும் என் சகோதரிகளுக்கும் சரிசம பாகம் இருக்கிறது என்றும் எனக்கு கூடுதல் உரிமை எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.